உ

சிவமயம்.

# மருதாசலபதி உயிர்வருக்க மாலை.

இஃது

[illegible] வித்துவான்

கந்தசாமி முதலியாரால் இயற்றியது.

11 JAN 1920

குமாரர் கி. அருணாசல முதலியார் அவர்களின் நினைவாக அன்பளிப்பு
அளிப்பவர்
திருமதி சியாமளா அருணாசலம்
(1982) சீர்காழி

PRINTED BY
THE NEILGHERRY PRESS COMPANY,
OOTACAMUND.

1873.

உ

சிவமயம்.

வெற்றிவே லுற்றதுணை.

# மருதாசலபதி உயிர்வருக்க மாலை.

இஃது

கோயமுத்தூர் வித்துவான்

கந்தசாமிமுதலியாரால்

இயற்றியது.

PRINTED BY
THE NEILGHERRY PRESS COMPANY,
OOTACAMUND.

1873.

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

# மருதாசலபதி உயிர்வருக்க மாலை.

காப்பு.

## வெண்பா.

உயர்விருக்கஞ் சேர்ந்த மரு
தோங்கன்முருகேசற்,
குயிர் வருக்கமாலையினை யோதற்—
கயர்வின்றித்,—
தாந்தோன்றி வாரணத்தின்
றாளிணை கட்கன்புருவா,
யாந்தோன்றி நின்றுதொழுவாம்,

## மருதாசலபதி உயிர்வருக்கமாலை

அகரமா முயிரே எழுத்தெலாமான
வாறுபோல் யாவு மானவனே,
சகரமாதியவாஞ் சடாக்கரமனுவுட்
டமைத்தொளிர் சோதியேதனக்கோர்,
நிகரநுமுதலே நெஞ்சிலெந்நாளு
நினைக்குமாறருடரல் வேண்டும்,
மகரயாழ்முனிவன்றுதிசெயும்பெருமை
மருதமாமலை முருகோனே .. ...(க)

ஆதியு நடுவு மந்தமுமில்லா
வரும்பெருஞ் சோதியேயமர,
ரோதியுமுணர வரியதாம் பொருளே,
யுருவருவாய் நின்ற வொன்றே
பூதியுங் கண்டியாதிய வணிநத,
புண்ணியச்சைவ வேதியனே
மாதிருவோர்கண்மணந்திடுமார்பா,
மருதமாமலை முருகோனே ...... (உ)

## மருதாசலபதி உயிர்வருக்கமாலை

இல்லதையுள்ள தெனநினைந்துருகி
    எண்ணமிட்டலைதருமனமாங்,
கல்லதைக் கனிபோற் கனிவிக்கவல்ல
    கந்தனே கற்பகக் கனியே,
யல்லதையல்ல தென்றுணர் மெய்மை
    யடியனேற்கருளுநாளுளதோ,
வல்லதை நிகர்த்த பன்னிருதோளா
    மருதமாமலை முருகோனே. ...... (௩)

ஏதலையறமா மேற்றலைபாவ
    மீதறநூன் முடிபாகு,
மாதலாலடியேனில்லையென்னும
    லனுதினமீயுமாறருளாய்,
சாதலாதியவுந் தவிர்த்திடும் பெருமைச்
    சரவணப்பொய்கையின்றகமை,
மாதலம்புகழத்தலவளஞ்சிறந்த
    மருதமாமலை முருகோனே ...... (௪)

மருதாசலபதி உயிர்வருக்கமாலை

உலகவரெல்லாமுன்னையேதொழவு
 முன்மனுக்கணிக்கவுமுனது,
பலகலைதெரிந்து பகரவுமுனது
 பலபதிபரவவும் விழாக்கொண்,
டிலகுறும் பவனிகாணவும் பெறுவ
 தெந்தநாளினிதெனக் கருளாய்,
மலகதிவிலக்குமருததீர்த்தஞ்சேர்
 மருதமாமலை முருகோனே ...... (ரு)

ஊதியமென்பதென்னை யென்றறிவா
 லுய்த்துணர்ந்திடின்மலமறுக்கும்,
பூதியாமெனவேமறைபலமுகத்தாற்
 புகலுருநிற்கவுமந்தோ,
வேதியர்சில்லோரதைவிடுத்தவமே
 வீணராய்த்திரியுமாறென்னே,
வாதியர்க்கடுத்தபொருள்பலநிறைந்த
 மருதமாமலை முருகோனே ...... (சா)

மருதாசலபதி உயிர்வருக்கமாலை

ஏனைத்துணைப் பாவராசியோ ரெனினு
 மிறைவநின் கோயிலின் வாயிற்,
றினைத்துணையளவு நினைப்பிலா துறினுஞ்
 செறிமலமறப்பெரும்பாவ,
மனைத்தும் வெந்தவிய வருளுவாயென்றே
 யடியனேன்கேட்டு வந்தடைந்தேன்
மனைத்துணை யவளாம் வள்ளி நாயகனே,
 மருதமாமலை முருகோனே ...... (எ)

ஏழை பங்காள னிருண்மலப் பகைவ
 னேத்துவாரிடர் கெடுத்தவர் தங்,
கோழை முற்றறவேகுமைத்திடுங் குரவ
 னெனநனிகூறுமாகுறியாய்,
தாழையந்தருவாதிகள் செறிசோலைச்
 சாரலி னவமணியுடனே,
மாழையங்கிமையோருலகினைப்பழிக்கு,
 மருதமாமலை முருகோனே ...... (அ)

மருதாசலபதி உயிர்வருக்கமாலை

ஐயமுந்திரிபுமாதிய விலக்கி
யறிவநின்னுகமத்துள்ள,
மெய்யறிந் தனதுசேர்பதாம் புயத்தை
விட்டிடா துட்டெளி வுடனே,
துய்ய மூதுரையாற் பழிச் சுனர்க் கல்லாற்
சுகாநந்தமெய் துமாறெளிதோ,
மையுலாம்பொழிலின் மயிலினமகவு
மருதமாமலை முருகோனே ...... (௯)

ஒன்னலர்க்குடைந்தோர் யாவரேயெனினு
மோடியிங்கணுகுமின்விரைந்து,
முன்னர் வானவர்க்காய்ச் சூர்கிளை முடித்த
மூர்த்தியை நாத்தழும்புறவே,
பன்னலுற்றிடுமின்வருந்தன் மினெனவே
பற்பலவாய்மைகளுரைத்து,
வன்னியோ டடுத்து முனிவரர் வணங்கு
மருதமாமலை முருகோனே ...... (௧௦)

மருதாசலபதி உயிர்வருக்கமாலை

ஓலமிட்டலறி யின்னமும் வேத
முன்பதத்தினையுணராமற்,
சாலநொந்தழியவன் மனக்கொடிய
சழக்கனே னெய்து மாறெளிதோ,
மூலகாரணமாயாவையும் படைத்த
மூர்த்தியே முதல்வர்களென்னு,
மாலயனாதி தேவர் காண் பரிய
மருதமாமலை முருகோனே ...... (கக)

ஔவிய மழுக்காறுதிய மனத்தே
னமல நற்குணஞ் சிறிதில்லேன்,
கௌவிய பாசத் தவலனே னெனினுங்
கைவிடல்நீதியோகண்டாய்,
பௌவநேரசுரர் குடிமுடித்தமரர்
பதிகுடியேற்றியமுதல்வா,
மௌவலங்கானில்வண்டுபாண்மிழற்று
மருதமாமலை முருகோனே ...... (கஉ)

முற்றிற்று.